சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம் – பர்கூர் ஒன்றியத்தில் உள்ள சின்ன பர்கூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியின் பழுதடைந்த வகுப்பறை கட்டடத்தை இடிக்க அனுமதி அளித்¶ – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (ப) எண்.07

நாள்: 06.01.2011
மார்கழி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2041,
படிக்கப்பட்டவை.

1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.6166/2009/ என்.1, நாள் 23.09.09.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.67492/09/டியூ3, நாள் 28.08.2010 (ம) 2.12.10.

------

ஆணை:

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியத்தினை சேர்ந்த சின்னபர்கூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி வகுப்பறைக் கட்டடம் 1248 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடம் ஆகும். இக்கட்டடம் கட்டப்பட்டு 28 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்பொழுது இக்கட்டடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் இப்பள்ளிக் கட்டடத்தினை இடித்துவிட 16.04.2010 அன்று ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து, அப்பள்ளி கட்டடத்தினை இடித்துவிட அனுமதி கோரியுள்ள ஒன்றில் படிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 03.04.2008–ல் இடிக்கப்பட வேண்டிய கட்டடம் குறித்து அரசால் கீழ்கண்ட வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

(அ) கட்டடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டடத்தின் பரப்பளவினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும், கட்டடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் கட்டடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்கும் குறைவாகவும் இருந்தால் அத்தகைய கட்டடங்களை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்கலாம்.

(த.பி.பா)

(ஆ) கட்டடத்தின் வயது 30 – லிருந்து 40 – க்குள்ளும், கட்டடங்களின் பரப்பளவு 450 சதுர அடிக்கு மேலாக இருந்தால் இத்தகைய கட்டடங்களை இடிப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி ஆணை பிறப்பிக்கலாம்.

3. இந்நேர்வில் உள்ள கட்டடத்தின் வயது 28 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆய்வறிக்கையில் கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை மோசமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இடிக்கப்பட வேண்டிய பழுதடைந்த கட்டடத்தின் பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மேற்காணும் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதினையே உறுதி செய்கின்றது. மேலும் இப்பள்ளிக் வகுப்பறைக் கட்டடம் இடிப்பதனால் இங்கு பயிலும் மாணவ மாணவியருக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் மாற்றுக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்தள்ளதாகவும், புதிய கட்டிடம் கட்ட அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசிலித்தது கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 1248 சதுர அடி பரப்பினை உடைய கட்டப்பட்டு 28 ஆண்டுகள் ஆன சின்ன பர்கூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி கட்டடத்தின் மோசமான உறுதியற்ற தன்மையை கருத்தில் கொண்டு சிறப்பு இனமாகக் கருதி இக்கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>
முதுநிலை நேர்முக உதவியாளர்.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்